**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**ந.க.எண்.2594/அ5/2026, நாள்.17/09/2026**

.....

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவு திட்டம் – AMS இணையத்தில் பள்ளிகளில் தினசரி சத்துணவு வழங்கல் விவரங்களை 100% பதிவேற்றம் செய்தல் – தொடர்பாக.

பார்வை மாவட்ட ஆட்சியர், வேலூர், அவர்களின் கடிதம் நே.மு.க.எண்.3/183/2025, நாள். .08.2026

.....

பார்வையில் காணும் கடிதத்தில் வேலூர் மாவட்டம், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டத்தின் கீழ் பள்ளிகளில் மாணவர்களுக்கு சத்துணவு வழங்கப்படும் விவரங்களை AMS Portal–ல் தினசரி 100% முழுமையாக பதிவேற்றம் செய்ய வேண்டும் என்றும், வேலூர் மாவட்டத்தில் சத்துணவுத் திட்ட செயல்பாடு மற்றும் சத்துணவு உண்ணும் மாணவ/மாணவியர்களின் எண்ணிக்கை தினந்தோறும் Pradhan Mantri Shakthi Nirman – PMPOSHAN– இணையதளம் வாயிலாக பதிவிடப்படும் எண்ணிக்கைக்கேற்ப மட்டுமே மத்திய அரசிடமிருந்து உணவூட்டு மானியம் பெறப்பட இயலும் என்பதால், அவ்வப்போது உள்ளீடு செய்து இத்திட்டம் சிறப்புடன் செயல்பட பள்ளித் தலைமை ஆசிரியர்கள் வாயிலாக சத்துணவு உண்ணும் பயனாளிகளின் எண்ணிக்கையை தினந்தோறும் பதிவேற்றம் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காண் பொருள் சார்பாக வேலூர் மாவட்டத்தில் உள்ள தொடர்புடைய அனைத்து பள்ளித்தலைமையாசிரியர்களும் தனி கவனம் செலுத்தி தினசரி பிற்பகல் 12.00 மணிக்குள் AMS PORTAL – ல் அனைத்து விவரங்களையும் பதிவேற்றம் செய்ய அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் இது தொடர்பாக அனைத்து தலைமை ஆசிரியர்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கி 100% DAILY REPORTING எட்டப்படுவதை உறுதி செய்யுமாறு மாவட்டக் கல்வி(இடைநிலை, தொடக்கக் கல்வி) அலுவலர்களுக்கு தெரிவிக்கலாகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

17/9/26

பெறுநர் –

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலைக் கல்வி / தொடக்கக் கல்வி)
   வேலூர் மாவட்டம். (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்கள்
   வேலூர் மாவட்டம்.

நகல்–

மாவட்ட ஆட்சியர்,வேலூர்,அவர்களுக்கு
தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.